விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 மாசி 11 ஜ- ஆகி 1 இதழ் 12
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 22-2-1985

## ★ தமிழரின் விடுதலைப்போராட்டம் வெற்றி என்று கோரும் துண்டுப்பிரசுரம்

### பல்கலைக்கழக மாணவர் விநியோகம்

(கொழும்பு)

"வடபகுதிப் போராட்டத்திற்கு வெற்றி, தமிழர்களின் விடுதலைப்போராட்டத்திற்கு வெற்றி, வடபகுதியிலிருந்து ராணுவத்தை வெளியேற்று'' என்று கோரும் துண்டுப்பிரசுரங்களை கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் மத்தியில் விநியோகித்துள்ளதாக உயர் கல்வி பிரதி அமைச்சர் திரு. ஏ.எம்.ஆர்.பி. அத்தநாயக்கா பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்; ''பல்கலைக்கழகத் திருத்தச்சட்டத்தை வாபஸ் பெறமாட்டோம். இந்தச் சட்டத்தில் திருத்தமும் செய்யப் படமாட்டாது'' என்று கூறினர்.

## ● இலங்கை — இந்திய கடற்படை கூட்டு ரோந்து:

# எம். ஜி. ஆர். கடும் எதிர்ப்பு!

(சென்னை)

**இராமேஸ்வரம் கடல்பகுதியில் மோதல்களைத் தவிர்ப்பதற்கு இந்திய கடற்படையினரும், இலங்கைக் கடற்படையினரும் கூட்டாக ரோந்து சேவை புரிய வேண்டுமென்ற இலங்கை வெளியுறவு அமைச்சரின் யோசனைக்கு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரன் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.**

தமது எதிர்ப்பை மின்சாரத்துறை அமைச்சர் திரு. எஸ் ராமச்சந்திரன் மூலம் இந்திய கொள்கைத்திட்டக் குழுத்தலைவர் திரு; ஜி பார்த்தசாரதிக்கு தமிழக முதல்வர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சரின் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகுறித்து அரசு பரிசீலித்து வருவதாக திரு. ஜி. பார்த்தசாரதி குறிப்பிட்டிருப்பதாக சென்னையில் நேற்று வெளியான மத்திய அரசின் அறிக்கையொன்று தெரிவித்தது. (சூ)

### ட்ராக்டர்தீக்கிரை

(சுன்னுகம்)

திருநெல்வேலிச் சந்திக்கண்மையில் நேற்று முன்தினமிரவு ட்ராக்டர் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

## ராணுவமுகாம்மீதான தாக்குதல் பற்றிய செய்தி

### ராஜாங்க அமைச்சு அறிக்கை

(கொழும்பு)

வடக்கில் இரு முகாம்களின் மீது இம் மாதம் 13-ம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல்களில் 134 இராணுவத்தின்ர் பலியானதாக' எல். ரி. ரி ஈ.' சென்னையில் விடுத்திருக்கும் அறிக்கையை, ராஜாங்க அமைச்சு மறுத்துள்ளது.

ராஜாங்க அமைச்சு நேற்று மாலை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது: ''பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனத்தை ஆதாரமாகக் கொண்டு 'ஏ. எஸ். பி. மற்றும் 'ராய்ட்டர்' செய்தி நிறுவனங்கள் புதுடில்லியில்

(6ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## குருநகர் மக்கள் பிரச்னை: உடனடி வெளியேற்றம் இல்லை!

[யாழ்ப்பாணம்]

குருநகரிலிருந்து இன்று வெளியேறுமாறு பணிக்கப்பட்ட 150 குடும்பங்களைச் சேர்ந்த 780 பேர் சார்பில் நேற்றுக்காலை யாழ். பிரஜைகள் குழுவினரைச் சந்தித்த தூதுக்குழுவினர் அம்மக்களின் பரிதாப நிலைமையை விளக்கினுகள்.

இதனைத் தொடர்ந்து பிரஜைகள் குழுவினர் உடனடியாக யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்துடன்

(5-ம் பக்கம் 3-ம் கலம் பார்க்க)

## "விடுதலைப்பாதையின் முட்டுக்கட்டைகள்!"

[யாழ்ப்பாணம்]

''கல்லூரிகளில்நடைபெறும் கொள்ளைகளினுல் தமிழ் மாணவர்கள் எதிர்காலம் பாழடிக்கப்படுகிறது இவற்றில்ஈடுபடுபவர்கள் நிச்சயமாகவிடுதலைப் பாதையில் முட்டுக்கட்டைகளே'' என்று 'தமிழ் ஈழ விடுதலை இயக்கம்' வெளியிட்டுள்ள பிரசுரம் ஒன்றில் கண்டனம் தெரிவித்துள்ளது.

'தமிழ் ஈழ விடுதலை இயக்கம்' அரசியற் பிரிவு இப்பிரசுரத்தை வெளியிட்டுள்ளது.

(5ம் பக்கம் 2ம் கலம் பார்க்க)

## தமிழ்நாட்டில் பயிற்சி ஜனதிபதி கருத்து: பாரதம் கவலை

(புதுடில்லி)

இலங்கைத்தமிழ்ப்போராளிகளுக்கு தமிழ்நாட்டில் பயிற்சியளிக்கப்பட்டுவருவதாக மீண்டும் இலங்கை ஜனதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன தெரிவித்திருப்பதுகுறித்து இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

இலங்கைப் போராளிகளின் பயிற்சி முகாம்கள் எதுவும் தமிழ்நாட்டில் இல்லையென்று இந்திய அரசு தெரிவித்திருந்தும் ஜனதிபதி ஜெயவர்த்தன இவ்வாறு மீண்டும் தெரிவித்திருப்பது வருந்தத்தக்கதென்று இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர்தெரிவித்தார்.

இது தொடர்பாக இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரமேஷ் பண்டாரி நேற்றுப் புதுடில்லியில்இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் திரு பெர்னுட் திலகரத்னுவைச்சந்தித்து கவலை தெரிவித்தார்.

### இலங்கை-இந்திய கூட்டு ரோந்து

இலங்கை - இந்திய கடல் கூட்டு ரோந்துபற்றி இலங்கையில் நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டுதான், இது பற்றித் தீர்மானிக்கப்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## யாழ். நகரில் நேற்று ....

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் நீதிமன்றங்களில், நேற்று விசாரணைகள் நடைபெற்றன சட்டத்தரணிகள் வழக்குகளில் ஆஜராகினுர்கள.

### பல்கலைக்கழகம் அஞ்சலி

வவனியாவில் அண்மையில் ராணுவத்தினரால் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான விஞ்ஞான பீட மாணவர் றெக்ஸ் யோகராசாவின் [லக்கி] மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து யாழ். பல்கலைக்கழகத்தில் அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இவர் இறுதி ஆண்டு பரீட்சை எடுத்து விட்டு பெறுபேறுகளுக்காகக் காத்திருந்தார்

யாழ் ஆஸ்பத்திரியில் பிரசவ வார்ட்டில் நேற்று முன்

(6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## 'லலித்' அரபுலீக் குழு சந்திப்பு

[கொழும்பு]

இலங்கையின் தற்போதைய நிலை குறித்து தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி அரபு லீக் தூதுக்குழுவிடம் நேற்று விளக்கக் கூறினர்.

(5ம்பக்கம் 5ம் கலம் பார்க்க]

## செங்கல்பட்டில் இலங்கை அகதிகள்

(சென்னை)

மண்டப முகாமிலிருந்த 79 குழந்தைகள் உட்பட 723 இலங்கை அகதிகள் நேற்று செங்கல்பட்டுமாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களுக்கு அங்கு மருத்துவ, குடிநீர் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

## வண. சிங்கராயர் வழக்கு: பெரிய இசைத்தட்டுப்பற்றி உதவிப்பொலிஸ்அதிபர் சாட்சியம்

[கொழும்பு]

''இனக்கலவரத்தைத் தூண்டக்கூடிய ஈழம்பற்றிய பாடல்களையும், உரையாடல்களையும் கொண்ட பெரிய இசைத்தட்டுக்களை ஈழவேந்தனிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு தாம் வணபிதா. ஜீவா போலுக்குத் தெரிவித்ததாக சிங்கராயர் ஒப்புக்கொண்டுள்ளார்.''

இவ்வாறு இரகசிய பொலிஸ் பிரிவின் உதவிப் பொலிஸ்

(6ம்- பக்கம் 2-ம் கலம்பார்க்க)


சிவமயம்

## இன்று மங்களகரமான திறப்பு விழா

### இந்திரா ஜுவெல்லர்ஸ்



நிகழும் இரத்தாஷி வருஷம் மாசி மாதம் 11-ந் திகதி (22-2-85) இன்று காலை 10 மணி 48 முதல் 11 45 வரையிலான சுப வேளையில் இல. 185 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில்

எமது புதிய ஸ்தாபனம் திறந்துவைக்கப்படும்.

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.



அசல் 22 கரட் தங்க நகைகள் குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும்.

## இந்திரா ஜுவெல்லர்ஸ்

185 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (1952)

# விளம்பரம்

## விற்பனைக்கு

யூரியா உரம் விற்பனைக் குண்டு. M. G. M. For age Stores, No 208, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 22611 1839

முதல்தரமான விஜிதா நம் 1 நாட்டரிசி கல்லில்லாமல் கைதேர்ந்த தொழிலாளர்களினுல் கல் அரித்து தயாரிக்கப்படுபவை வர்த்தகர்கள் விரும்பி விற்பனை செய்வதும் பாவனையாளர்கள் கேட்டு வேண்டுவதும் விஜிதா நம் 1 நாட்டரிசி. தயாரிப்பாளர்களும் வினியோகஸ்தர்களும்; விஜிதா அரிசி ஆலை, தாவடி தெற்கு, கொக்குவில். 1909

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் ஒன்றரைப் பரப்புக் காணியும் சகல வசதிகளுடனும் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு இ. சங்கர், 428, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23853 1935

NV 370 EN வீடியோ டெக் ஒன்று விற்பனைக்கு உண்டுக் ராதா 21, வேம்படிவீதி, என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். 1927

யாழ்-மானிப்பாய் பிரதான வீதியில் மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு 200 யார் அண்மையில் வீடு/தொழில் நிறுவனங்கள் அமைக்கக்கூடிய 2¼ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.—த. சபாரத்தினம், கிராமசேவையாளர், கனகசபை வீதி, மானிப்பாய். 1947

கோப்பாய் மத்தி நாவலடியில் வீடு கட்ட உகந்த இடம் 44 பரப்பு வயல்காணி விற்பனைக்குண்டு. விபரம் :- முத்துக்குமாரசுவாமி வன்னியசேகரம், கல்வளவு, கோப்பாய். 1948

சகலவிதமான ஹோட்டல் தளபாடங்களும் உடன் விற்பனைக்கு உண்டு. விபரம் கீழ் வருமாறு: (1) டி பிறிசர் ஐஸ் பெட்டி (2) திண்டுக்கல் இரும்புப்பெட்டி (3) சீலிங் விசிறிகள் (4) மேசை விசிறிகள் (5) பெரிய கவுண்டர்கள் (6) சோ கேஸ் வகைகள் (7) குசினி தளபாடங்கள் (8) சாப்பாட்டு மேசைகள் மற்றும் ஏனைய ஹோட்டல் தளபாடங்கள் அடங்கிய யாவும். நேரில் பார்வையிடவும் கா. பாலகிஸ்ணபிள்ளை, மின்சாரநிலையம், ஸ்ரேசன் றோட், மாங்குளம். 1941

## தேவை

யாழ். வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு வியாபாரம் செய்வதில் முன் அனுபவமுள்ள விற்பனையாளர் தேவை. ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுத வாசிக்க தெரிந்தவராகவும், வியாபார ஸ்தாபனத்தில் முன் வேலை செய்த அனுபவத்துடன் விண்ணப்பிக்கவும். மின் பொறியியல் அனுபவம் விரும்பத்தக்கது. கலவரத்தின் போது பாதிக்கப்பட்டவருக்கு முன் உரிமை கொடுக்கப்படும். விளம்பர இல. 1942, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1942

யாழ். இந்து வெளிநாட்டில் உத்தியோகம் பார்க்கும் 1-1-1959-ம் ஆண்டு பிறந்த படித்த அழகிய மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. மணமகள் 1. 4, 5, 6-ம் திகதிகளில் பிறந்திருந்தால் விரும்பத்தக்கது. சாதி, இனம், மதம் கவனிக்கப்படமாட்டாது. சீதனம் ஓரளவு எதிர்பார்க்கப்படும். மணமகள் விரைவில் வெளிநாடு செல்லத் தயாராக இருக்க வேண்டும். விபரங்களுடன் புகைப்படமும் சேர்த்து தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1940, C/o 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 1940

## VACANCY

Vacancy exists for an Account Clerk at Jaffna College Agricultural Institute Maruthanamadam. All inclusive salary Rs, 1000/- p. m. only Apply to Principal before 10-03-85. Principal. 1926

## கல்வி

Radio and Electronic Engineering, பெண்களுக்காகிய பிரிவு 23/2/85 சனி காலை 10 மணிக்கு ஆரம்பமாகிறது. மக்களின் கஷ்டநிலை காரணமாக ஒருவித கட்டணமும் இன்றி சிறிது காலத்திற்கு கல்வியை மேற்கொள்ளலாம். பணவசதி உடையோர் விரும்பினுல் உரிய கட்டணத்தை செலுத்தலாம். தொடர்புகள்; பொறியியல் கல்வி நிலையம், சாந்தி சினிமா அருகாமை, யாழ்ப்பாணம். விசாரணைகள் ரைப்பிங் பிரிவு. 1932

## இலங்கை பனை அபிவிருத்திச் சபை

## கூறுவிலை கோரல்

சபையின் ''கற்பகம்'' விற்பனை நிலையங்களில் விற்பனை செய்வதற்காகப் பனம் பொருட்கள், பிரதேச உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றை வழங்க விரும்பும் உற்பத்தியாளர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைகள் யாவும் 28-02-85ம் திகதிக்கு முன்னராக பொதுமுகாமையாளர், பனை அபிவிருத்திச்சபை, தேசிய வீடமைப்பு செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிகவிபரங்கள் தேவைப்படின் சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பொதுமுகாமையாளர்**

இலங்கை பனை அபிவிருத்திச் சபை. 1950


கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ



# வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, கனடா செல்வதற்கான சகல ஒழுங்குகளும்,
பிரான்ஸ், ஜெர்மனி செல்வதற்கான சிறந்த வசதிகளும்,
குறைந்த செலவில் காலதாமதமின்றி செய்துகொடுக்கப்படும்.

PRASAD REST,
11-Upatissa Road,
BAMBALAPITIYA.
PHONE: 587855

வ. நல்லையா,
அலவத்தை,
அளவெட்டி.
[1943]



1 ஸ்பெயின் பிரான்ஸ் செல்வதற்கான சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

2 குறைந்தசெலவில் கூடிய விரைவில் BERLIN செல்வதற்கான ஒழுங்குகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.

**AIR-TRANSIT**

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99–2/56 B கபூர் பில்டிங
2-வது மாடி, கொழும்பு-1
போன்: 549365

538 (290) ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689



## யார் சொன்னது?

லிகுடைசர், பிளெண்டர், கிறைண்டர் ஆகியன திருத்த முடியாது என்று.
இவைகளை உத்தரவாதத்துடன் திருத்துபவர்கள்

# ஒமேகா

ஒமேகாவின் புதிய முகவரி:
164, மானிப்பாய்வீதி,
யாழ்ப்பாணம்.


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 2–9–1934

மறைவு: 23–2–1984

அமரர்

**திருமதி பரமேஸ்வரி குணபாலசிங்கம்**

எங்கள் அன்பு மனைவி, அன்புத் தாய், அருமைச் சகோதரி, இனிய மைத்துனி, நெஞ்சம் நீங்காத ஒளி விளக்கு உங்கள் ஆத்ம சாந்திக்காக கண்ணீர் அஞ்சலி செலுத்திப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனிமார். (1862)


## பேராதனை, கொழும்பு, ஶ்ரீ ஜெயவர்த்தனபுர

பல்கலைக்கழகங்களின்
(வெளிநிலை)
**விரிவுரைகள்**
கல்வியாண்டு 1985 / 86

இலங்கை பல்கலைக்கழகங்களின் வெளிநிலை பாடநெறிகளான

- கலைமாணி
- விஞ்ஞானமாணி (புள்ளிவிபரவியல்)
- சட்டமாணி
- வணிகமாணி

க. பொ. த. (உயர்தரம்) பாடங்களில் சித்திபெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.
விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன,

குறிப்பு:
மாணவர்களை அனுமதித்தல் கட்டுப்படுத்தப் பட்டுள்ளதால் 2-3-85க்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதையும் மனவருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

உதவிப்பதிவாளர்,
**பட்டப்படிப்புகள் கல்லூரி,**
168/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ. இல, 23715



## பேராதனை பல்கலைக்கழக

(வெளிநிலை)
விரிவுரைகள் 1985 / 86

கலைமாணி (B. A.)
விஞ்ஞானமாணி (B. Sc.)
(புள்ளிவிபரவியல்)

ஆரம்பம்: 23-2-1985

உதவிப்பதிவாளர்,
**பட்டப்படிப்புகள் கல்லூரி,**
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## மணிவாக்கு

பணம் படிப்பு பதவி முதலியவைகளில் பிறரைப் போல் இருப்பதே சுகம் என்று எண்ணுகிறோம். ஆனால் கடவுளோ துன்பத்தையும் தோல்வியையும் தந்து நமக்கு உயர்ந்த அன்பையும் உண்மையையும் அறிவித்துச் சான்றோராக்க முயல்கிறார்.

— எமர்சன்

# நமது நோக்கு

## இலங்கை தமிழர் பிரச்னையும் பாண்டிச்சேரி தேர்தலும்

கடந்த டிசம்பர் மாதம் நடந்த பொதுத்தேர்தலில் மிகப் பெரும்பான்மை பலத்தை மிகஎளிதில் சுவீகரித்துக்கொண்ட இந்திய பிரதம மந்திரி திரு ரஜீவ் காந்தி மார்ச் முற்பகுதியில் மீண்டும் 'மினி' (குட்டி) பொதுத்தேர்தல் ஒன்றை எதிர்நோக்கவிருக்கிறார். பதினொரு மாநிலங்களுக்கும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்துக்கும் நடைபெறவிருக்கும் இருநாள் தேர்தலையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

பொதுத்தேர்தலில் கிடைத்த அபரிமிதமான சுவீகரிப்பு இந்த 'மினி' தேர்தலிலும் அவருக்கு கிடைக்குமா என்பது பற்றி பலவிதமான கருத்துக்கள் இப்பொழுது வெளியிடப்படுகின்றன.

அன்னை இந்திராவின் திடீர்மறைவு, அதனால் ஏற்பட்ட பரிவு, ரஜீவ்காந்தியின் இளமை, மாசுபடாத நேர்மை, நேரு குடும்பத்தின் வாரிசு என்ற பெருமை - இவைகள் அன்றைய பெரு வெற்றிக்கு உதவிய சில முக்கிய அம்சங்கள்.

தமிழ்நாடு மாநிலத்தைப் பொறுத்தவரை மேற்கூறிய அம்சங்களுடன் முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு ஏற்பட்ட சடுதி சுகவீனம் அங்கு இரு கட்சி கூட்டணிக்கு சாதகமாக அமைந்த இன்னுமொரு அம்சம் எனக் கூறலாம்.

அதே சூழ்நிலை இன்னும் நிலவுகின்றதா என்பது ஓர் அர்த்தமுள்ள கேள்வி.

தேர்தல்காலத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் திரு. காந்தி உறுதியுடன் செயல்பட்டுவருவதை மத்தியில் காண்கின்றோம். கட்சிவிட்டு கட்சிதாவி நாட்டு அரசியலை அநாகரிகமாக்கிவந்த சந்தர்ப்பவாதிகளுக்கு ஆப்பு வைக்கும் வகையில் புதிய சட்டமொன்றை சகலகட்சிகளினதும் ஆதரவுடன் நிறைவேற்றியிருப்பதை முக்கியமாகக்குறிப்பிடலாம். கறுப்புப்பணப்புழக்கத்தையும் ஊழலையும் பூண்டோடுஒழித்துச் சமூகவாழ்வைத் தூய்மைப்படுத்தப் போவதாக அவர் இப்பொழுது சூளுரைத்துவருகின்றார்.

தென் மாநிலங்களைப் பொறுத்தவரை மேற்குறித்த பொதுவானவிடயங்களைவிட இப்பகுதிக்கே உரித்தான சிலபிரச்னைகள் தோன்றி வலுவடைந்திருப்பதால் அவ்விடயங்களில் இந்தியத்தலைவரும், அவரது கட்சியினரும் அவைகளை எவ்வாறு எதிர்கொண்டு தீர்க்கப்போகிறார்கள்? அதற்கான திட்டங்கள் என்ன? என்பதை வாக்காளர்கள் எதிர்பார்ப்பது இயற்கை.

கர்நாடக மாநிலத்தில் திரு ராமகிருஷ்ண ஏகடேயின் ஜனதா கட்சியையும், ஆந்திரமாநிலத்தில் திரு. என். ரி. ராமராவின் பாரத தேசம்கட்சியையும் இந்திரா காங்கிரஸ் எதிர்த்துபோட்டியிடுவது ஒருபுறமிருக்க தமிழர்களே பெரும்பான்மையாகவுள்ள பாண்டிச்சேரியில் பிரதானமாக திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து வெற்றி பெறுவதற்கு இந்திராகாங்கிரஸ், அகிலஇந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகக் கூட்டணி உறுதியான சில கொள்கைகளைப்பிரகடனப்படுத்தியாக வேண்டியநிர்ப்பந்தம் எழுந்துள்ளது.

சிறப்பாக இலங்கைத்தமிழர்கள் தினமும் ஆயிரக்கணக்கில் அகதிகளாகதமிழ்நாடுகரையை வந்தடைந்துக்கொண்டிருக்கும் வேளையில் (ஏற்கனவே சுமார் 50 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் அங்கு அகதிகளாகப் போய்ச் சேர்ந்துள்ளனர்) இந்தவிவகாரம்குறித்துஇந்திய அரசின் உறுதியானநிலையென்ன என்பதைப்பற்றிவாக்காளர்களுக்குவிளக்கவேண்டிய நிர்ப்பந்தம்இருக்கின்றது. எனவே தான்தேர்தலுக்கு முன்பதாகவேபுதுடில்லிசென்றுஇந்தியத் தலைவரைச் சந்தித்துப் பேச தமிழக முதல்வர் திரு. ராமச்சந்திரன் முடிவுசெய்திருக்கிறார் என்றும், அது பற்றி ஒரு முடிவுடன் வருவதற்காக திரு. ரஜீவ் காந்தியும் தமது பாண்டிச்சேரி பிரசாரப் பயணத்தை ஒத்திப்போட்டிருக்கிறார் என்றும் நாம் யூகிக்கலாம்.

இலங்கைமீது ராணுவ ரீதியில் நடவடிக்கை எடுத்து தமிழர் பிரச்னையைத் தீர்க்க வேண்டும் எனவற்புறுத்திவந்த திராவிடமுன்னேற்றக்கழகமும் திரு. நெடுமாறனின் காந்திகாமராஜ் காங்கிரஸ் கட்சியும் லோகசபை-மாநில தேர்தல்களில் தோல்வி கண்ட போதிலும், தேர்தலின்பின் மத்திய மாநில அரசுகளின் அசமந்தப்போக்கு மேற்படி கட்சிகளின் குரலை மீண்டும் வலுவடையச் செய்துள்ளது.

அண்மையில் ஆந்திர மாநிலத்துக்கு வந்திருந்த திரு ரஜீவ்காந்தி இலங்கை மீது ராணுவ நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நிருபர்கள் கேட்டபோது "அந்தப்பேச்சுக்கே இடமில்லை" யென்று அவர் பளிச்செனப் பதிலளித்தார். இந்திரா காலத்திலிருந்தே இக்கொள்கையைத தான் இந்தியா பின்பற்றி வருகின்றது என்றாலும் அதுகுறித்த கருத்து வெளிப்பாட்டில் வித்தியாசம் இருந்தது.

திருமதி இந்திரா காந்தியிடம் பிரஞ்சு பத்திரிகையாளரான நதாலி பிளேம் என்பவர் "தமிழருக்கு எதிராக புதிய வன்செயல்கள் ஏதும் நடைபெறுமானால் நீங்கள் மட்டுப்படுத்திய அளவில் ராணுவ தலையீடு ஏதும்செய்வீர்களா" என்று கேட்டபோது, "உண்மையாகவே நாங்கள் இதில் தலையீடு செய்யமுடியாது, அவர்களை வற்புறுத்தி செயல்படச் செய்வதற்கான எங்கள் சக்தியையெல்லாம் பிரயோகிப்போம்" என்று பதிலளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, தென்மாநிலங்களில், அதுவும் பாண்டிச்சேரியில் முன்னர் பொதுத்தேர்தலில் அடைந்த அளவுக்கு அபரிமிதமான வெற்றியைத் இந்திராகாங்கிரஸ்-அ. தி. மு. கூட்டணிபெற வேண்டுமானால் இலங்கைத் தமிழர்விடயத்தில் அவர்களின் நிலைப்பாட்டினை ஐயம்திரிபுக்கிடமின்றி வெளிப்படுத்தியாகவேண்டியிருக்கும்.

போர்த்துக்கல் ஆயுதங்களுடன் திருவனந்தபுரத்தில் வந்திறங்கிய சாயிர் நாட்டு விமானத்தை பெருந்தன்மையுடன் தலையிட்டு 24 மணிநேரத்தில் இலங்கை செல்ல அனுமதித்த திரு. ரஜீவ்காந்தி, மேற்படி ஆயுதங்களுக்குப் பயந்து ஆயிரக்கணக்கில் வந்திறங்கும் தமிழ்அகதிகள் விடயத்திலும், இருக்க இடமும்உணவும் கொடுத்து பெருந்தன்மையோடு நடந்துகொள்கிறார்கள் என அங்குள்ள தமிழ் வாக்காளர்கள் திருப்தியடைவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

மனிதர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை இது. சகல மட்டங்களிலும் விரைவான ஒரு சுமுகத்தீர்வையே அவர்கள் எதிர்பார்ப்பார்கள்.

## சைவ உலகு பெருந்துயர்

(மாவிட்டபுரம்)

"தனக்கென வாழாது பிறர் நலத்திற்காக வாழ்ந்த அடங்காத் தமிழன் பெரியார் சுந்தரலிங்கத்தின் மறைவுகுறித்து சைவத்தமிழ் உலகு பெருந்துயர் கொண்டுள்ளது"

இவ்வாறு பெரியார் சுந்தரர் மறைவு குறித்து மாவை ஆலய ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## தவக்காலச் சிந்தனை



### 3-ம் நாள்

"நீ பிச்சையிடும் பொழுதோ, உன் வலக்கை செய்வதை இடக்கை தெரியாதிருக்கட்டும்" (மத் 6/4)

உள்ளத்தில் கள்ளமின்றி, உண்மை வழி வாழ்ந்து, உத்தமராய், உயர்ந்தவராய் என்றும் வாழ, தவக்காலம் வழி காட்டுகிறது. பலர் பார்க்க வேண்டும். பலர் போற்ற வேண்டும் என்ற நோக்கோடு பகட்டான வாழ்க்கை வாழுவதை விடுத்து, முகவாட்டமின்றி மனச்சோர்வின்றி, அனைவர்க்கும் அருள் கொடுக்கும் ஆண்டவனின் குரல்கேட்டு அவனியிலே வாழ். "நீ நோன்பு இருக்கும்போது, தலைக்கு எண்ணெய் தடவு; முகத்தைக் கழுவு" (மத் 6/18) பாசத்தின் ஊற்றாய், பரமனின் உடமையாய் பாரினிலே வாழ்ந்துவிடு.

அருட்திரு வின்சென்ற் பற்றிக்

"காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையை

## மூடும் நடவடிக்கையை மீள் பரிசீலனை செய்யவும்"

### பரு. பிரஜைகள் குழுத்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை மூடும்நடவடிக்கையை மீள்பரிசீலனை செய்யும்படி தங்களைக்கேட்டுக் கொள்கிறோம்"

இவ்வாறு கோரும் மகஜரொன்றை பருத்தித்துறை பிரஜைகள் குழுத்தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு டென்சில்பெர்ணன்டோவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-:

"தீவிரவாதிகளின் தாக்குதல்களினால் சேதமடைந்த இத்தொழிற்சாலையில் தொழில்நுட்ப நடவடிக்கைகளை நிபுணர்கள் மேற் கொள்ளவுள்ளதால், இத்தொழிற்சாலை 6 மாதத்திற்கு மூடப்படவுள்ளதாக ஆங்கிலப்பத்திரிகையொன்றில் செய்தி வெளிவந்துள்ளது.

"இத்தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டால், இங்கு கடமையாற்றும் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் வேலையிழக்கவேண்டிய நிலை ஏற்படும். இதனால் அவர்களில் தங்கியுள்ள ஆயிரக்கணக்கானோர் பட்டினிக்குள்ளாக நேரிடும்.

"இத்தொழிற்சாலையில் கணவன், மனைவியரும் வேலை செய்கிறார்கள். இவர்கள் இருவரும்வேலையிழந்தால் அவர்களின் குடும்பத்தின் கதி என்ன? அவர்கள் நிர்க்கதிக்குள்ளாக நேரிடும்.

"காலி சிமெந்துத்தொழிற்சாலை 100 கோடிரூபா செலவில் விஸ்தரிக்கப்படவுள்ளதாக அறிகிறோம். இத்தொழிற்சாலை வெளிநாட்டிலிருந்து கிளிங்கரை இறக்குமதி செய்தே இயங்கவேண்டியுள்ளது.

"காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை மூடப்பட்டால் நாட்டின் சிமெந்து உற்பத்தி பெரிதும் பாதிக்சப்படும்".

"வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையின் தொழிற்பாடுகள் பெயரளவில் மாத்திரம் இயங்கிவருகிறது. அதே நேரத்தில் பெலியத்தையிலுள்ள காகிதத் தொழிற்சாலை நவீன மயமாக்கப்பட்டு வருகிறது."

"பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையையும்மூடி, பெலியத்தையில் இயங்கச்செய்ய நடவடிகைகள் மேற்கொள்ளப்படுவதை பாராளுமன்றத்தில் இடம்பெறும் விவாதங்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன.

"இவ்வாறான நடவடிக்கைகள் தமிழ்ப் பிரதேசத்தின் பொருளாதாரத்தைப் பாதிப்படையச் செய்வதுடன், ஆயிரக்கணக்கான மக்களை பட்டினிக்கும் உள்ளாக்கும்.

## எஞ்சிய பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டன!

(ஊரெழு)

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபையின் சுன்னாகம் உப அலுவலகத்தில் இருதடவைகள் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களைத் தொடர்ந்து, அங்குள்ள மத்தியகளஞ்சிய அறையில் எஞ்சியிருந்த பொருட்கள் முழுவதும் இராணுவப் பாதுகாப்புடன் அங்கிருந்து வேறொரு பாதுகாப்பான இடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. யாழ், அரசாங்க அதிபரின் உத்தரவின் பிரகாரமே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

(6-ம் பக்கம் 1-ம் கலம் பார்க்க)

## நீர்வேலியில் கந்தபுராண படனம்

(நீர்வேலி)

நீர்வேலிகந்தசுவாமி தேவஸ்தானத்தில் கந்தபுராண படனம் நேற்றுக்காலை ஆரம்பமாகியது. தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

வெள்ளிச்சிந்தனை

## தீபாராதனை

சைவாலயங்களில் நடைபெறும் வழிபாட்டுக் கிரியைகளில் தீபாராதனைக்குத் தனிச் சிறப்பு உண்டு. பலர் தீபாராதனை வேளை மட்டும்தான் சுவாமி தரிசனம் செய்யவேண்டும் எனக்கருதுமளவிற்கு தீபாராதனை முதன்மை பெற்றிருக்கிறது.

பூசைக்கிரியைகளைப் பதினாறு எனப் பிரித்து அதன் செயல்முறை, அவசியம், காரணம், பயன் என்பனவற்றை ஆகமங்கள் விளக்கும். இவற்றை சோடசோபசாரம் என்று வடமொழியில் குறிப்பிடுவர். இப்படியான உபசாரங்களுள் ஒன்றே தீபஆராதனையாகும்.

நிலம். நீர், நெருப்பு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து வகையான பொருள்களைக் கொண்டேயிந்த உபசாரங்களை நிறைவேற்றவேண்டும்.

மனிதவாழ்வில் சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முப்பெரும் காரணங்களாலும் இடம்பெறும் ஒளி, வழிபாட்டிலும் தீபாராதனை- திருவிளக்கு ஏற்றுதல்: ஓமம் செய்தல் போன்ற கிரியைகளில் இடம் பெறுகின்றது.

தீபாராதனையில் இடம் பெறும் தீபங்களைத் தவிர சட்டவிளக்கு, சரவிளக்கு, தூண்டாமணி விளக்கு, பாவை விளக்கு முதலிய விளக்குகள் அழகாகவும் தொகையாகவும் கொளுத்தப்படுவதை ஆலயங்களில்காணலாம்.

தீபாராதனைக்கு உபயோகிக்கும் தீபங்களுக்கும் ஏனைய விளக்குகளுக்கும் உபயோகிக்கும் எண்ணெய் விடயத்தில் இப்போது ஒருவரும் கவனம் எடுப்பதில்லை. பலர் இக்காலத்தில் மின்விளக்குகளால் ஏற்படும் வெளிச்சத்திலேயே திருப்திப்படுகின்றனர்.

நல்லமுறையில் பூசை அபிஷேகம் என்பன செய்யவிரும்புவோர் இயன்ற மட்டும் விளக்குகள், தீபங்களுக்கு பசு நெய் உபயோகித்தல் அவசியம் பசு நெய் கிடைக்காத கட்டத்தில் எருமைநெய் உபயோகிப்பதைப் பற்றியோசிக்கலாம், மரவிதைகளில் இருந்துகிடைக்கும் எண்ணெய் மூன்றும்தரமானதாகவே கணிக்கப்பட்டுள்ளது

ஆலயத்தில் விளக்கேற்றுதலாகிய புண்ணியததால் நல்லறிவு மிகும். நல்லறிவு பெற விருப்புவோர் ஆலயத்தில் நெய்விளக்கு ஏற்றல் வேண்டும்

உடம்பெனும் மனையகத்துள்
உள்ளமேதகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி
உயிரெனும் திரிமயக்கி
இடம்படும் ஞானத்தீயால்
எரிகொள இருந்து
நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காணலாமே
—திருநாவுக்கரசர்.

அருளாளன்

# திட்டமிட்டபடி ஜனதிபதி அறிவிப்பு
# பங்களாதேஷில் தேர்தல்!

(டாக்கா)

**பங்களாதேஷின் பாராளுமன்றத் தேர்தல்கள் திட்டமிட்டவாறு வரும் ஏப்ரல் மாதம் 6ம் திகதி நடைபெறும் என்று ஜனதிபதி லெப்டினட் ஏர்ஷாட் தெரிவித்துள்ளார்.**

வங்காள மொழிக்காக 33 ஆண்டுகளுக்கு முன்னர் போராடி இறந்த தியாகிகள் நினைவாக நேற்று அவர் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் உரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

ஏப்ரல் மாதம் நடைபெறும் பாராளுமன்றத் தேர்தல்களில் தமது அரசாங்கம் நடுநிலை வகிக்கும். இதனுல் சகல எதிர்க்கட்சிகளும் இத் தேர்தலில் பங்குகொண்டு பாராளுமன்ற ஜனநாயகத்தை நாட்டில் மீண்டும் ஏற்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

வானொலி, தொலைக்காட்சியில் இவரது பேச்சு நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் தலைநகர் டாக்காவில் கூடிய அவாமிலீக் கட்சி தலைமையிலான 15 கட்சிக் கூட்டணி இத் தேர்தலை பகிஷ்கரிப்பது என்றுஏகமனதாக முடிவுசெய்தது.

பங்களாதேஷின் இன்னொரு எதிர்க்கட்சிக் கூட்டணியான 7 கட்சிக் கூட்டணி வரும் பாராளுமன்ற தேர்தலில் பொதுமக்களை பங்குகொள்ளாமல் செய்வது என்றும் தேர்தலில்பங்குகொள்வதில்லை என்றும் தீர்மானித்துள்ளது.

(சூ)

## இந்தியா வெற்றி

மெல்போர்ன், பெப் 21

உலக கிரிக்கெட் சாம்பியன் போட்டிக்காக மெல்போர்னில் இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நடைபெற்ற ஆரம்ப கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் குறிப்பிட்ட 50 ஓவர்களில் சகலவிக்கட்டுக்களையும் இழந்து 183 ஓட்டங்களை எடுத்தது.

இந்தியா 46 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 184 ஓட்டங்களை எடுத்தது. மொகமட் அர்ஷதூதீன் ஆட்டமிழக்காமல் 93 ஓட்டங்களை எடுத்தார். சுனில் மனேகர் காவஸ்கர் 54 ஓட்டங்களை எடுத்தார். [சூ]

## கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நேரு (ஜெகதீஸ்) என்ற இளைஞர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப் பட்டதாகவும், இதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தமிழீழ தேசிய விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவித்துள்ளது.

நேருவைத் தெரிந்த எல்லோராலும் நேசிக்கப்பட்டவர் என்றும், நீதியையும் மனிதாபிமானத்தையும் நிலைநிறுத்துவதற்கான போராட்டத்தில் முழுமையாக ஈடுபட்டவர் என்றும் அத்துண்டுப் பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவு அகதிகளுக்கு வங்கி கிளை உதவி

(சுண்டுக்குளி)

முல்லைத்தீவு அகதிகளுக்கு 4 ஆயிரம் ரூபா பெறுமதியான உடுதுணிகளையும், 3 ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும் யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதி மக்கள்வங்கி கிளை ஊழியர்கள் வழங்கியுள்ளனர்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் மூலம் இவ்வுதவி வழங்கப்பட்டது.

## ஓய்வுபெறும் அதிபர்
# பண்டிதர் சரவணமுத்து

இலக்கணம், இலக்கியம், சைவ சித்தாந்தம் ஆகியவற்றில் ஆழ்ந்த அறிவு, தெளிவாகவும் சரியாகவும் மாணவர்கள் ஏற்றுக் கொள்ளும் விதத்திலும் கல்வி போதிக்கும் ஆற்றல் மாணவர்களை மேனிநிலைக்குச் கொண்டுவர வேண்டும் என்ற தணியா ஆவல் போன்றவற்றின் சங்கமமாக விளங்கும் வித்துவான் பண்டிதர் சைவப்புலவர் சின்னத்தம்பி சரவணமுத்து அவர்கள் தனது முப்பத்தைந்து ஆண்டுகால ஆசியப் பணியை நிறைவு செய்து கொண்டு ஓய்வு பெற்றுள்ளார்கள். உசன் இராமநாதன் மகா வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் அன்னாரின் சேவையைப் பாராட்டி விழா எடுக்கின்றனர்.

அதிபராக மயிலிட்டி சி. சுவாமிநாதன் அவர்களும் உப அதிபராகச் சிந்தனைச் செல்வர் அளவெட்டி பொ. கைலாசபதி அவர்களும் தமிழ்ப் பேராசிரியராகப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் ஒரே நோக்கில் இணைந்து திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையின் பொற்காலத்தினை உருவாக்கிக் கொண்டிருந்த வேளையில் அப்பெருமக்களிடம்ஆசிரியர்பயிற்சி பெறும் நற்பேறு பெற்றவர் திரு. சி. சரவணமுத்து ஆசிரியராகப் பயிற்சிபெற்றுக்கொண்டிருந்த போது பண்டிதமணி அவர்கள் காட்டிய வேறும் ஒருவழியில் அடிஎடுத்து வைத்தார் அவர் தமிழையும் சமயத்தையும் ஆழமாகக் கற்கவேண்டும். என்பது பண்டிதமணியின் அறிவுரை. வித்துவான் ந. சுப்பையபிள்ளை, வித்துவான். க வேந்தனர் ஆகியோரிடமும் பயின்று பண்டிதர் வித்துவான் சைவப்புலவர் ஆகிய பட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

இவருடைய ஆசிரியப்பணி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலே ஆரம்பமாகி ஈழத்துச் சாந்திநிகேதனம் எனப்புகழ் பெற்ற ஹொறணை ஸ்ரீபாலி கல்லூரியிலே தொடர்ந்தது. பின்னர் சண்டிலிப்பாய் த. க. பாடசாலை உசன் சைவ வித்தியாசாலை (இப்பாடசாலையே பின்னர் இராமநாதன் மகா வித்தியாலயமாக உயர்ந்தது), பட்டிருப்பு மகாவித்தியாலயம், தெமட்டகொடை அ. த. க. பாடசாலை ஆகியவற்றிலும் இவர் கடமையாற்றினர். ஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய பண்டிதர் அவர்களின் அறிவு ஆற்றல், அனுபவம் முதலியவற்றைக் கவனத்திலெடுத்த கல்வி அமைச்சு அவரை அதிபராகப் பதவி உயர்த்தியது. விடத்தற்பளை கமலாசனி வித்தியாசாலையில் இவர் அதிபராகப் பணி புரிந்தார். கல்விப் போதனையிலே தோய்ந்திருந்த இவருக்கு நிர்வாக வேலைகளில் ஈடுபாடு ஏற்படவில்லை. கனிஷ்ட அதிபர் பதவியை இராமநாதன் மகாவித்தியாலயத்திற் பெற்று க. பொ. த. ப. உயர்தர வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ், இந்து நாகரீகம் ஆகிய பாடங்களைப் போதிக்கும் பணியை விருப்புடன் மேற்கொண்டார்.

— சிற்பி

## அடையாள அட்டை பிரதியும் வேண்டும்

[சுண்டுக்குளி]

இலங்கை கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் 16 வயதிற்கு மேற்பட்டவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன், அதன் பிரதியையும் [போட்டோஸ்ரற்] விண்ணப்பத்துடன் தவருது இணைக்க வேண்டும்என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களகத்திஞல் விடுக்கப்பட்ட உத்தரவைத் தொடர்ந்து யாழ். பழைய கச்சேரியில் இயங்கும் கடவுச்சீட்டுக் கிளையில் இம் மாதம் 14-ம் திகதி முதல் அடையாள அட்டையுடன் அதன் 'போட்டோஸ்ரற்' பிரதியும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இப்பிரதிகள் தகுதி வாய்ந்த அதிகாரியினுல் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

## கோப்பாய் சிவத்துக்கு ரூ. 5,000 பரிசு!

(கிளிநொச்சி)

ஆக்கவுரிமைகள் வியாபாரக் குறிகள் திணைக்களம் நடத்திய 1984 ஆம் ஆண்டுக்கான இலக்கியப் போட்டிகளில் சிறுகதைக்கான ஐயாயிரம் ரூபா பரிசைப் பிரபல எழுத்தாளர் கோப்பாய்-சிவம் பெற்றுக் கொள்கிறுர்

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கடமையாற்றும் இவர் கிளிநொச்சி 'ஈழநாடு' வாசகர் வட்டம், திருநெறிக் கழகம் என்பவற்றின் செயலாளர். இவர் மறுமலர்ச்சிக்கால எழுத்தாளர் பண்டிதர் ச. பஞ்சாட்சரசர்மாவின் புதல்வராவர்.

இலங்கைப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பலவற்றிலும் சிறுகதை, கவிதை, கட்டுரை, குறுநாவல் என்று பலதுறைகளிலும் சலியாது எழுதிவரும் கோப்பாய் சிவம் அநேக போட்டிகளில் புரிசுகள் பெற்றிருக்கிறுர்.

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களக் கடன் வழங்கு சபை நடத்திய கட்டுரைப் போட்டியில் ரூ 500/- முதல் பரிசை மிகஅண்மையில் இவர் பெற்றுக் கொண்டார் யாழ் இலக்கியவட்டம் நடத்திய இரசிகமணி நினைவுக் குறுநாவல் போட்டி 'களம்' சிறுகதைப் போட்டி, 'தாரகை' நடத்திய கதிர்காமநாதன் நினைவுச் சிறுகதைப் போட்டி 'செவ்வந்தி' ஆண்டு நிறைவுக் கவிதைப் போட்டி, தகவம் கலாண்டுப் பரிசு, 'ஈழநாடு' பத்தாண்டு நிறைவு விகடகவிதைப் போட்டி என்பன இவர் பரிசுகளும். பாராட்டும் பெற்று வெற்றியீட்டிய போட்டிகளுள் சிலவாகும்.

## "கரையோரப்பகுதி மக்களின் சுகாதாரம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கவும்"
### சுகாதார அமைச்சருக்கு பரு. பிரஜைகள் குழுத் தலைவர் மகஜர்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கரையோரப்பகுதி மக்கள் பலாத்காரமாக அவர்களுடைய வீடுகளிலிருந்து வெளியேற்றப் பட்டுள்ளனர். இவ்வாறு வெளியேற்றப்பட்ட மக்கள், குறிப்பாக மீனவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இவர்கள் போதியளவு சுகாதார வசதிகளின்றி பாடசாலைகளிலும், கோவில்களிலும் தங்கியுள்ளனர்; சுகாதார வசதிகளின்றி இவர்கள் இருப்பதால் வயிற்ருேட்டம் போன்ற கொடிய நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய கொடிய நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்ற உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேம்.''

இவ்வாறு கோரும் மகஜரொன்றை பருத்தித்துறை பிரஜைகள் குழு சார்பில் வி. கே. கணேசலிங்கம் சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்துவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது, இங்குள்ள மருந்து வகைகள் உள்ளக வெளியகச்சிகிச்சைகளுக்கு நாளுக்குநாள் பயன்படுத்தப் படுகிறது.

''இவ் வைத்தியசாலையிலுள்ள ஒரேயொரு வைத்திய நிபுணரும் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு தற்போது ஒரு வைத்தியநிபுணரின்சேவை அத்தியாவசியமாகத் தேவைப் படுகிறது.

''பருத்தித்துறை பகுதியிலுள்ள வீதிகள் குண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளதால், இப் பகுதி மக்கள் யாழ்ப்பாணத்துடனை தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையிலுள்ளனர்.

எமது பகுதிமக்கள் படிப்படியாகப் பஞ்சத்திற்குள்ளாகி வருகிறுர்கள். எமது பகுதி மக்கள் மீது சில அதிகாரங்கள் பலாத்காரமாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளது. இதனுல் எமது பகுதி மக்களின் சுகாதாரம் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

''மேற்கூறியவை தொடர்பாக உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு தங்களைச்கேட்டுக்கொள்கிறேம்''.

## சேவையிலிருந்துஓய்வு



சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தில் 15 வருடகாலம் சமூகக்கல்வி ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. சி மகாலிங்கம் இம்மாதம் முதல் தமது 35 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்ருர். தமது பதவிக்காலத்தில் பண்டாரவளை, இரத்தினபுரி, மாத்தளை, ஹட்டன் ஆகிய பகுதிகளிலுள்ள அரசினர் பாடசாலைகளிலும், பண்ணுகம் வடக்கு அ. மி. த. க. பாடசாலை, சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் ஆகியவற்றிலும் தொடர்ந்து 35 வருடகாலமாக ஆசிரியராக இவர் கடமையாற்றினர். வடலியடைப்பு, பண்டத்தரிப்பை பிறப்பிடமாககொண்ட இவர் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வட்டுக்கோட்டை கிளை உபதலைவராக நீண்டகாலமாக பணியாற்றி இப் பகுதி ஆசிரியர்களின் இடமாற்றம் மற்றும் பல்வேறு பிரச்னைகளை ஆராய்ந்து சுமுகமாக தீர்க்க உதவினுர். சிறந்தசமூக சேவையாளராகவும், தொழிற் சங்கவாதியாகவும் விளங்கும் திரு. சி மகாலிங்கம் வடலியடைப்புகிராம அபிவிருத்திச் சங்க உபதலைவராகவும், பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திசங்கத்தின் பொருளாளராகவும் மற்றும்பல பொதுநல இயக்கங்களின் முக்கிய உறுப்பினராகவும் சேவையாற்றி வருகின்ருர்.

என். எம். கந்தசாமி

## தனிப்பட்ட காசோலை: ஆசிரியர்கள் கஷ்டம்

(முல்லைத்தீவு)

''கடந்த மாதம் தங்களால் ஆசிரியர்களுக்கு தனிப்பட்ட காசோலை மூலம் சம்பளம் வழங்கப்பட்டது. இதனுல் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகி வருகிறுர்கள். இலங்கை வங்கி முல்லைத்தீவுக் கிளை மூலம் சம்பளக் காசோலை வழங்குமாறு கேட்டோம். நாமே தனிப்பட்டமுறையில் காசோலை வழங்குவதற்கு விரும்பம் தெரிவித்தோம் என்ற தவருன கருத்தையிட்டு வேதனையடைகிறேம்''

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க முல்லைத்தீவுக்கிளை செயலாளர் திரு. ம. அன்ரனி ஜெயநாதன் முல்லைத்தீவு கல்வித்திணைக்கள கணக்காளருக்கு அனுப்பிவைத்தள்ள மகஜரில் தெரிவித்துள்ளார்.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''ஆசிரியர்கள் தனிப்பட்ட காசோலையைப் பெற்றுக் கொண்டு, வங்கியில் காசோலையைவைப்பிலிட்டுப் பணத்தைப்பெறமுடியாது நாளுக்கு நாள் அலைந்துதிரிகிறுர்கள்.

''இம்மாதம் தொடக்கம் ஆசிரியர்கட்குத் தனிப்பட்ட காசோலை வழங்கவேண்டாமென தங்களைக்கேட்டுக்கொள்கிறேம்.

''யாழ் கல்வித்திணைக்களத்தில் ஆசிரிய வேதனங்கள் தற்போது தனிப்பட்ட காசோலை மூலம் வழங்கப்படுவதில்லை என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேம்''

## நிவாரணப் பொருட்கள்

(சுண்டுக்குளி)

சாவகச்சேரி, நல்லூர், கொடிகாமம் ஆகிய பகுதிகளில் கடற்கண்காணிப்பு வலயத்திஞல் தொழில் வாய்ப்புக்களை இழந்து மிகவும் பாதிப்புற்ற மீனவக் குடும்பங்களுக்கு அந்தந்தப் பகுதி உதவி அரசாங்க அதிபர்களிஞல் ஜனவரி மாதத்திற்குரிய நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுவிட்டன.

## இன்றைய பலன்

மாதம்—மாசி
திகதி—11 (1985-2-22)
வாரம்—வெள்ளி
திதி—திருதியை பின்இரவு வரை
நட்சத்திரம்- உத்திரட்டாதி வரை

மேடம்: எதிர்பார்த்த விடயம் இன்று ஏமாற்றம் தரலாம், பேச்சில் நிதானம் பெருமையைத் தேடித்தரும்.

இடபம்: இளைய சகோதரத்திஞல் இதயம் புண்ணுகும், முயற்சியில் முட்டுக்கட்டை தோன்றும்.

மிதுனம்: பொருளாதாரக் குறைவிற்கு இடமுண்டு, தாய் வழியால் மனக் கவலைக்கிடமுண்டு.

கடகம்: புத்திரவழியால் போற்றத்தக்க முன்னேற்றமுண்டு, எண்ணம்போல் எதுவும் நடவாது.

சிங்கம்: மனச்சஞ்சலங்களுக்கு இடமுண்டு, மனத்திடம் வேண்டும்.

கன்னி: வாழ்க்கையில் வளம் குன்றும், வணிகர்களாயின் பொறுமைவேண்டும்.

துலாம்: தன்கையே தனக்கு உதவியென்று செயலாற்றவும்; திடீர்மனமாற்றங்களுக்கும் இடமுண்டு.

விருச்சிகம்: தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும், இறைவழிபாடு நன்று.

தனுசு: கைக்கெட்டியது வாய்க் கெட்டாமல் போகலாம், அமைதி வேண்டும்.

மகரம் இன்று ஏமாற்றத்துக்கு இடமுண்டு, நிதானம் வேண்டும்.

கும்பம் பங்காளிகளுடன் பகைத்துக் கொள்ளாதிருப்பது நன்று.

மீனம்: உள்ளச் சோர்வுக்கு இடம் உண்டு, உடல்நலத்தைப்பேணவும்.

திருமலை
வே. ரவீந்திரன்


**றீகல் மினி**
தினசரி 10-15, 1-30
தியாகராஜன், அம்பிகா, ராஜீவ், ஊர்வசி நடிக்கும்
சத்யா மூவிஸ்
**நெருப்புக்குள் ஈரம்**

**றீகல்**
தினசரி 10-30, 2 00
AN OFFICER AND A GENTLEMAN
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

**லிடோ** சினிமா
தினசரி 10-30, 2-00
**36 Chamber of Sholine** (KaratteFilm)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-15, 12-15, 2.30
சிவாஜி, கே. ஆர். விஜயா பிரபு நடித்த
**நீதிபதி**
(கலர்)


## விடுதலைப்பாதையின்...

(1-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

''விடுதலை என்ற பெயரில்... மாணவர் கல்வியில் கை வைக்காதே; தொழிலாளர் வாழ்க்கையில் விளையாடாதே; வர்த்தகரின் கொள்ளை லாபத்துக்கு வழி செய்யாதே; தபால் - தந்தித் தொடர்புகளைத் துண்டிக்காதே; மக்கள் உடைமைகளைக் கொள்ளை அடிக்காதே'' என்றும் அப்பிரசுரத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

மேலும் அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''எழுச்சியுற்ற எமது தமிழ் ஈழப்போராட்டமானது ஏனைய சர்வதேச விடுதலைஅணிவகுப்புகளுடன் ஒன்றுபட்டு துரிதகதியில் முன்னேறி வருகின்றது. சக முற்போக்கு அமைப்புகளுடன் இணைந்து தமிழீழ விடுதலை இயக்கம் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றது. இவ்வேளையில் எதிர்கால தமிழீழ மக்கட் சமுதாயத்தின் பொருளாதாரத்துக்கும் அறிவியற் செழுமைக்கும் குந்தகம் ஏற்படும் வகையிலான நடவடிக்கைகளை தமிழீழ விடுதலையை வெறும் பிற்போக்குக் கும்பல்கள் மேற்சொண்டுவருவது கவனிக்கப்படவேண்டியதும் கண்டனத்துக்குரியதுமாகும்.

''தமிழீழ மாணவர் சமுதாயத்தின் கல்வி அரசாங்கத்திஞல் திட்டமிடப்பட்டு சிதறடிக்கப்பட்டுவருகின்றது. தமிழீழபாடசாலைகளுக்கான கல்வி வசதிகள்படிப்படியாக குறைக்கப்படுகின்றன. நெருக்கடி காரணமாக பெருமளவுமாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில் எஞ்சியுள்ள மாணவர்களின் கல்வியையும் பாதிக்கும் வகையில் பாடசாலை உபகரணங்கள் பல அண்மைக் காலங்களில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. கல்வியின் அவசியத்தை உணர்ந்துகொள்ளாத தலைமைகளால் வழிநடாத்தப்படும் பிற்போக்குக் கும்பல்கள் பாடசாலைகளிலே தொலைக் காட்சிப் பெட்டி, வீடியோ டெக், ரேனியோ இயந்திரம், தட்டச்சு இயந்திரம், விஞ்ஞான ஆய்வுகூடப் பொருட்கள் என்பவற்றைக் கொள்ளையடித்துச்சென்றுள்ளனர். இவற்றில் ஈடுபடுபவர்கள் நிச்சயமாக எமது விடுதலைப் பாதையில் முட்டுக்கட்டைகளே.

''காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை அண்மையில் கொள்ளையிடப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலையை அரசாங்கம் இழுத்துமூடிவிடக்கூடிய ஆபத்தான சூழ்நிலைஏற்பட்டுள்ள இவ்வேளையில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான நடவடிக்கைகள் அத்தகைய ஆபத்தை துரிதப்படுத்துவனவாகவே அமையும். இதஞல் பாதிக்கப்படப் போகிறவர்கள் இன்று தமது உடைமைகள் அனைத்தையும் இழந்து, உழைப்பை மட்டும் வைத்து சீவனம் நடத்தும் அத் தொழிற்சாலையின் தமிழீழ தொழிலாளர்களே.

'சோதனையிடப் போவதாகக் கூறிக்கொண்டு வீடுகளினுள் நுழைவோர் அங்குள்ள நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுவிடுவதால் அவர்களிடமிருந்து அவற்றைப் பாதுகாப்பதற்காக தனியார் நிறுவனமான ஹற்றன் நாஷனல்வங்கிலொச்கர்களில் வைக்கப்பட்டிருந்த தமிழீழமக்களின் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன பெருமளவு மக்களை நிர்க்கதிக்குள்ளாக்கியிருக்கும் இந்த நடவடிக்கைக்கும் தமிழீழவிடுதலை இயக்கத்திற்கும் சம்பந்தமில்லை என்பதை தமிழீழ மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

''அண்மையில் யாழ். நகரில் இரண்டு தங்கநகை வியாபார நிலையங்கள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன சில தமிழ்பேசும் பிரஜைகள் துப்பாக்கிமுனையில் கடத்தப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு மௌனவிரதமிருக்கும் இந்தக் கும்பல்கள் ஒருபோதும் மக்களின் விடுதலையை முன்னெடுத்துச் செல்லும் விடுதலைப் போராளிகளாக இருக்கமுடியாது.

''தபால், தந்தி தொடர்புகளைசீர்குலைக்கும்வகையிலேயே அண்மையில் நடந்துள்ள உப தபால் நிலையக் கொள்ளைகள் அமைந்துள்ளன. மேலும் இக் கொள்ளைகளைத் தொடர்ந்து சில தபால் நிலையங்கள் மூடப்பட்டுவிட்டதால் அங்கிருந்து சமூக சேவைப் பகுதியினரின் உதவியைப் பெறும் வயோதிபர்கள், அனாதைகள், விதவைகள் ஆகியோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அண்மையில் தமிழீழத்தின் பல இடங்களில் நீதிமன்றங்கள் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன. மக்களின் சில பிரச்னைகளை முழுமையாக இல்லாவிடினும் ஒரு பகுதியையேனும்தீர்த்துவைக்கக்கூடிய நிலையிலுள்ள இந்நீதிமன்றங்களை சேதப்படுத்தும் நடவடிக்கையானது தற்சமயம் எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எந்த வகையிலும் உதவப்போவதில்லை.'' [மா]

## லலித்...

1-ம்பக்கம் 3ம் கலத்தொடர்ச்சி

3 மணித்தியாலம் இடம் பெற்ற இச்சந்திப்பின்போது மற்றும் பலவிடயங்க குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

### இரண்டாவது ஆண்டு
## நினைவு அஞ்சலி




மலர்வு: 1933-08-17
உதிர்வு: 1983-02 15

சுதுமலை
**திருமதி லலிதாதேவி பேராயிரம்பிள்ளை**

அவர்களது மறைவின் இரண்டாம்ஆண்டு நிறைவுத் திதிநாள் 1985-02-22 வெள்ளிக்கிழமை இன்றாகும்.

அன்பான நினைவலைகளிஞல் அலைப்புறும் அன்புக் கணவன், பிள்ளைகள், மாமியார், சகோதரி, மச்சான்மார், மற்றும் உறவினர், அயலவர்களுடன் மானிப்பாய் மகளிர் கல்லூரியினரும். 1928

## 21வது நாள் நினைவஞ்சலி



**நா. இராமசாமி [கார் சாரதி]**

**தோற்றம் : 3-4-1920 மறைவு: 4-2-1985**

எங்களை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென அகால மரணமான உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்ஞரின் மறைவு கேட்டுஅனுதாபம் தெரிவித்தும் நேரில் வந்து ஆறுதல் அளித்தோருக்கும் எமது நன்றி. 24-2 1985 ஞாயிற்றுக்கிழமை அன்ஞரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு உற்ருர், உறவினர் நண்பர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

மனைவி. மக்கள், மருமக்கள், சகோதரர், மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள்.

9, காதி அபூபக்கர் வீதி,
யாழ்ப்பாணம். 1915


**கே. ஜீ. இன்ஸ்ரிரியூட்**
(இலங்கைவங்கி முன்பாக)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,
**I. A. A. I. A. B.**
**CHARTERED**
ஆரம்பம்: 23 – 2 – 1985
(1949)



**பிழை திருத்தம்**
மில்க்வைற் சலவைப்பவுடர்
பெரிய வெற்றுப்பெட்டி ஒன்றை அனுப்பி
**ஸ்ரீ இராமகிருஷ்ணரின் ஸ்ரிக்கர்**
ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
**மில்க்வைற்** யாழ்ப்பாணம்.


## 31-ம் நாள் நினைவு அஞ்சலி

ஆசீர்வாதம் மாசிலாமணி

மலர்வு : 8-12-1934



உதிர்வு : 23-1-1985

''மாசில்'' என அன்பாக அழைத்து எல்லோரையும ஆருத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு அழியாப் பேரின்ப பாக்கியத்துக்கு அழைக்கப்பட்டுவிட்டீர்.

ஐயகோ! உமது பிரிவால் ஏங்கித் துடிக்கும் அன்பு மனைவி நாயகியும், லிண்டா, ஜெறி. ரேய், குழந்தைகளும்; அன்புச் சகோதரர்கள் பரியதாசன், ரேஸ் சில்வெஸ்ரர் (நவமணி), மத்தியூஸ், லீலா, பவளம் ஆகியோரும், மாமா லோப்பையாவும்; சிறியதாய்மார்கள், மைத்துனர். மைத்துனி, சகலன், மருமக்கள் மற்றும் உற்ருர். உறவினர் யாவரும் வேண்டிப் பிரார்த்திப்பது :- அன்பும், இரக்கமும் நிறைந்த கருணைக் கடலாம் யேசுவிடம், உமது அடியான் காலஞ்சென்ற ஆசீர்வாதம், யோகம்மா, இவர்களின் மகன் மாசிலாமணி பேரில் இரக்கம்வைத்து அவரை உமது நித்திய பேரின்பத்தில் சேர்த்துக் கொள்ளும்.

அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 22-2-1985 வெள்ளிக்கிழமை காலை 6-00 மணிக்கு:-

மாதகல்—புனித தோமையப்பர் தேவாலயம்;
யாழ்ப்பாணம்—புனித ஸ்நாபக யுவானியார் தேவாலயம்;
திருகோணமலை—புனித மரியாள் தேவாலயம்;
மட்டக்களப்பு—தாண்டவன் வெளி காணிக்கைமாதா தேவாலயம்;

இவ்வாலயங்களில்
அஞ்சலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

சகோதரர்கள்
''யோகம்மா லொட்ஜ்''
241, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

திருமதி
நாயகி மாசிலாமணி,
''லின்டா லொட்ஜ்''
மாதகல். 1945

## இன்று கதவடைப்பு

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை ப நோ. கூ. சங்கத்தில் அடிக்கடி இடம் பெற்றுவரும் கொள்ளைச் சம்ப வங்களைக் கண்டித்து இன்று வெள்ளிக்கிழமை முழுநாளும் கதவடைப்புச் செய்வதென்று சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த கதவடைப்புக்கு ஏனைய வர்த்தக ஸ்தாபனங்கள், பாவனையாளர்கள், அங்கத்தவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பைக் கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## எஞ்சிய

(3ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)
மேற்படி அலுவலகத்தில் இடம்பெற்ற முதலாவது கொள்ளைச் சம்பவத்தின் போது காசாளரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணப்பெட்டிக்குள் 709 ரூபா 58 சதம் ரொக்கப்பணமும், 1370 ரூபா 15 சதம் பெறுமதியான காசோலைகளும் வைக்கப்பட்டிருந்ததாக மேற்படி உப அலுவலக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இங்கு கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள் சம்பந்தமான கணக்கெடுப்பு இப்பொழுது நடைபெற்றுவருவதால், அதன் பெறுமதிபற்றி இன்னும் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்படாத போதிலும், சுமார் 8 லட்சம் ரூபாவுக்கும் அதிகமானவை என்றும் சொல்லப்படுகிறது. மின்சார வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுவரும் அலுமினிய ஏணி, அலுவலக தட்டச்சு, ரோனியோ இயந்திரங்கள் என்பனவும் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களுள் அடங்குகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்னமாவடி அகதிகள்

[முல்லைத்தீவு]

தென்னை மாவடி வாசிகளை கிளிநொச்சியில் குடியமர்த்தும் திட்டம், தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

தென்னைமாவடியைச் சேர்ந்த அதிகமான மீனவர்களும் விவசாயிகளும் அண்மையில் பாதிக்கப்பட்டு அகதிகளாகி, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு கே. ஞானச்சந்திரனின் பெரு முயற்சியினால் முல்லைத்தீவில் இரு பாடசாலைகளில் தங்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மேற்படி நூற்று ஐம்பது குடும்பங்களையும் கிளிநொச்சியில் குடியமர்த்த பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டது.

இது சம்பந்தமாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு, தென்னைமாவடி அகதிகளின் உண்மை நிலையை விளக்கி, அவர்களின் தொழில்வாய்ப்புகளைக் கருத்திற் கொண்டு அகதிகள் விரும்புவது போல் கொக்கிளாய்ப் பகுதியிலேயே அவர்களை மீண்டும் குடியமர்த்துமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்தே அரசாங்கத்தின் புதிய திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

## வண. சிங்கராயர்...

(1ம்பக்கம்3ம்கலத்தொடர்ச்சி)
அதிபர் புண்ணியசில்வா, வணபிதா. சிங்கராயருக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கில் சாட்சியமளிக்கையில் கூறினர்.

இவ்வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எச். டபிள்யூ. சேனநாயக்கா முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டுவருகிறது.

இந்த வழக்கில் உதவிப் பொலிஸ் அதிபரால் தரிவிக்கப்பட்ட இந்த விடயத்தை சிங்கராயருக்கு எதிராகப் பிரயோகிப்பதில்லையென்று தாம் தீர்மானித்துள்ளதாக நீதிபதி தெரிவித்தார்.

## குருநகர்...

1ம் பக்க 5ம்கல தொடர்ச்சி]
தொடர்பு கொண்டு அவர்கள் நிலைமைபற்றிக் கேட்டனர்.

குருநகரில் 86 வீடுகளில் வசிக்கும் 150 குடும்பங்களையும் நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் குடியேறுவதற்காக மேலிடத்துடன்தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கியதாகவும், வெள்ளிக்கிழமை அவர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டாமென்று கேட்டிருப்பதாகவும் இது பற்றிய பதிலை மேலிடத்திலிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் அரசாங்க அதிபர் பிரஜைகள் குழுவினரிடம் தெரிவித்தார்.

குருநகர் இராணுவ முகாமிலிருந்து 300 மீட்டருக்குள் வசிக்கும் 150 குடும்பங்களை இன்று வெளியேறுமாறு உதவி அரசாங்க அதிபர் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## யாழ். நகரில்..

[1ம்பக்க 2ம் கலத்தொடர்ச்சி]
தினம் துப்பாக்கியுடன்சென்று ரகளை புரிந்தவர், இனந்தெரியாத இளைஞர்களிடம் நேற்று சிக்கிக்கொண்டார்.

இவரை நேற்று நண்பகல், அடையாளம் காண்பதற்காக அந்த இளைஞர்கள் பிரசவ வாட்டிற்கு கூட்டிச் சென்றனர்.

### கிடைத்த தண்டனை!

யாழ். மின்சார நிலையத்திற்கு எதிரில் வீதியிலுள்ள இரும்புக்கம்பியொன்றில் நேற்றுப் பிற்பகல் நான்கு மணியளவில் இளைஞர் ஒருவர் சுமார் அரைமணிநேரம் கட்டப்பட்டிருந்தார்.

அவர் கழுத்தில் தொங்கவிடப்பட்டிருந்த அறிவித்தலில்'20-2-85 இரவு யாழ் ஆஸ்பத்திரி பிரசவ வாட்டில் தாதிமார்களையும் பிரசவத் தாய்மார்களையும், இவர் பயமுறுத்தியுள்ளார். அத்துடன் கண்ணாடிகளையும் உடைத்துள்ளார் இவருக்கு இத்தண்டனையை வழங்குகின்றோம்'' 'புளொட்' என்று எழுதப்பட்டிருந்தது. பிற்பகல் 4-30 மணிக்கு இளைஞர் ஒருவர் அவரது பின்பக்க கட்டுகளை அவிழ்த்து விட்டாராம்.

### வான் கடத்தல்

யாழ். நகரில் சோடா வான் ஒன்று இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டது.

### மகளிர் கல்லூரி கொள்ளை முயற்சி

யாழ். நகரிலுள்ள மகளிர் கல்லூரியில் இனந் தெரியாதவர்கள் நேற்றுக்காலை சென்று துப்பாக்கி முனையில் ஆசிரியர்களின் சம்பளத்தை கொள்ளையடிக்க முயற்சித்தனர்.

சம்பளப்பணம், முதல் நாள் வழங்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு நின்ற பெற்றோரைபயமுறுத்திவிட்டு அவர்கள் சென்று விட்டனராம். இதேமாதிரி மற்றொரு கல்லூரிக்கும் இனந்தெரியாதவர்கள் சென்று ஆசிரியர் சம்பளப்பணத்தை கொள்ளையடிக்க முயற்சித்தனராம்.

### கார் கடத்தல்

யாழ் நகரில் நேற்றுப் பிற்பகல் கார்ஒன்று இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டது. [க]

# அகதிகளுக்கு தரம் குறைந்த பாண்!

## அரசாங்க அதிபர் எச்சரிக்கை

(சுண்டுக்குளி)

தரமும், நிறையும் குறைந்த பாண்களை முல்லைத்தீவு அகதி முகாம்களுக்கு விநியோகிக்கும் பேக்கரிகளை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் எச்சரித்தார்.

நேற்றுமுன்தினம் காலை முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில், குழுவொன்று பேக்கரிகளில் திடீர் வேட்டை நடாத்தியது. அப்போது, நிறைகுறைந்த, அரைவேக்காடான பாண்களைத் தயாரித்து, அகதிகள் முகாம்களுக்கு வழங்கப்படுவதுதெரிய வநதது. இவ்விபரம் அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

அரசாங்க அதிபர் பேக்கரி உரிமையாளர்களுக்கு, இனி இவ்விதம் பாண்கள் தயாரிக்கக்கூடாதென்று எச்சரித்தார்.

## ராணுவ...

[1-ம்பக்க5ம்கலத் தொடர்ச்சி]
இன்று வெளியிட்ட செய்தியில், வடக்கிலுள்ள இரண்டு முகாம்கள் மீது தமிழ்த் தீவிரவாதிகள் பெப்ரவரி மாதம் 13-ம் திகதி நடத்திய தாக்குதலில் 134 இராணுவத்தினர் பலியானதாக 'எல். ரி. ரி. ஈ.' உரிமைகோரி சென்னையில் அறிக்கை வெளியிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

''இதனுடன் இரு இராணுவ முகாம்களும் தாக்குதலுக்குப்பின்னர் மூடப்பட்டு விட்டதாகவும் ராணுவத்தினர் பதவியாவுக்கு இடமாற்றப் பட்டிருப்பதாகவும் அறிக்கையில் தெரிவித்ததாக செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''இச்செய்தி முற்றிலும் மாறானதுடன், செய்தியும் திரித்துக் கூறப்பட்டுள்ளது.''

''பெப்ரவரி மாதம் நடந்த சம்பவத்தில், ஆயுதப்படையினர் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியபோது நான்கு சிப்பாய்கள் மட்டுமே உயிரிழந்தனர்.

தீவிரவாதிகள் தரப்பில் பதினான்கு பேர் மாண்டனர். பலர் காயமடைந்தனர். அவர்களிடமிருந்து பெருமளவுவெடி மருந்துகள், ஆயுதங்கள், வானொலித் தொடர்பு சாதனங்கள் கைப்பற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து அடுத்த நாள் ஆயுதப்படையினர்நடத்திய வேட்டையில் ஐம்பத்து இரண்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். சிப்பாய்கள் பலியாகவில்லை. மேலும் கொக்கிளாய், திரியாய் இராணுவ முகாம்கள் மூடப்படவில்லை''.

## 14 பேர் கைது

[கொழும்பு]

படகுமூலம் இந்தியாசெல்ல விருந்த 14 பேர் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

---

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் இரத்தினம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கோண்டாவில் கிழக்கில் வசிப்பவருமான வைத்திலிங்கம் இரத்தினம் காலமாகிவிட்டார். இவர் வாலாம்பிகையின் அன்புக்கணவரும், வன்னியசூரியர், வைத்தீஸ்வரன், சரஸ்வதி ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். ராசமலரின் அன்பு மாமனாரும், சுதர்சனியின் அன்புப் பேரனுமாவார். கொக்குவில் வர்த்தகர் தம்பிப்பிள்ளையின் பெருமகனுமாவார். அன்னாரின் தகனக்கிரியை 22-2-85-ல் 11 மணிக்கு கொக்குவில் மயானத்தில் நடைபெறும், தயவுசெய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

1959

---

# மரண அறிவித்தல்

## முடியப்பு சூசைப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்)

| ஆண்டவன் படைப்பு | ஆண்டவன் இணைப்பு |
|---|---|
| 05 07-1923 | 20-02-1985 |



உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இளைப்பாறிய பாடசாலை அதிபர் மு சூசைப்பிள்ளைஅவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர் சிசிலியாவின் அன்புக் கணவரும்,ர்வி(பொறியியலாளர்,லண்டன்), ர'ஜ் [பொறியியலாளா, லண்டன், ரகு (லண்டன்), ரமேஸ், றஞ்சினி, றமணி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். இறுதிச் சடங்குகள் ஞாயிறு (24-2-85)காலை 10மணியளவில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி, பிள்ளைகள்.

1960

---

# மரண அறிவித்தல்

## செல்லையா ஹென்றி துரைச்சாமி

(அரசாங்க கட்டட ஒப்பந்தக்காரர்)

செல்லையா ஹென்றி துரைச்சாமி காலமாகிவிட்டார். இவர் மேரி. றெஜினா செல்வம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற அல்பிரேட் துரைசிங்கம், டெய்சி இராசதுரை [சுண்டிக்குழி] ஆகியோரின் சகோதரரும், லோகநாதன் (கனடா), ஜெதேவி, குலநாதன், ஜெகநாதன் (றியாட்), பத்மநாதன், பிரேமநாதன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத்தந்தையும், தவராசா, ஜெயரஞ்சினி, அரியமலர், சொபித்தா ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் நாளை சனிக்கிழமை(23-2-85) காலை9-மணிக்கு அன்னாரின் இல்லம், நம்பர் 10, பிளச்சர்லேன், சுண்டிக்குழியிலிருந்து, பரியோவான் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1946

---

# மரண அறிவித்தல்

## திரு விக்ரர் நவரத்தினசிங்கம்

திரு. விக்ரர் நவரத்தினசிங்கம் அன்றூ காலமானார். இவர் திருமதி ரஞ்சிதராணியின் அன்புக் கணவரும், தேவரஞ்சினியின் அன்புத் தந்தையும், இளைப்பாறிய ஆசிரியர் S K S அன்றூவினதும், இளைப்பாறிய ஆசிரியை கெலன் தங்கரட்ணத்தினதும் மூத்த புதல்வனும், ஜெசற் குணசிங்கம், ஜெகோரத்தினசிங்கம் [U. K] ஜெபரத்தினசிங்கம் ஆகியோரினதும் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற N. E ஜெயசிங்கம், திருமதி ஜெயசிங்கம், திரு திருமதி N. J. யேசுதாசனின் மருமகனும், திருமதி ஜெயசோதி சத்தியநாதன் திருமதி ஜெபமணி இராசநாயகம் ஆகியோரினதும் பெருமகனும், திருமதி குளோறியா, மனோன்மணி ஆகியோரது மைத்துனருமாவார். அன்னாரது பூதவுடல் ஆராதனைக்குப்பின் இறுதிச் சடங்குகளுக்காக அன்னாரது இல்லத்திலிருந்து பரியோகோபு ஆலய சேமக்காலைக்கு 23-2-85 காலை 10 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர்கள் நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

S. K. S. அன்றூ, அம்மன் றோட்,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

1961

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49. Telegram Tle phone um 22nber389-24126.